








# நடைமுறை ஜெபம்

பாடம் 7 மே 16, 2026


"ஜனங்களே,
எக்காலத்திலும் அவரை
நம்புங்கள்; அவர்
சமுகத்தில் உங்கள்
இருதயத்தை
ஊற்றிவிடுங்கள்; தேவன்
நமக்கு
அடைக்கலமாயிருக்கிறார்."
(சங்கீதம் 62:8)





நமது உலகம் சிதறிப்போனாலும், காலம் கடந்து சென்றும் நமது ஜெபங்களுக்கு பதில் கிடைக்கவில்லை என்றாலும், நாம் “இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும்” என்று பவுல் நம்மை அறிவுறுத்துகிறார்(எபே. 6:18).

இதுபோன்ற சூழ்நிலைகளில், எலியா மற்றும் அன்னாளினுடைய ஜெபங்கள் நமக்கு உதவியளித்து ஊக்கமளிக்கும்.

ஆனால் நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும்? நாம் எதை கேட்க வேண்டும்? நாம் தனியாக ஜெபிக்க வேண்டுமா அல்லது மற்றவர்களுடன் இணைந்து ஜெபிக்க வேண்டுமா? ஜெபம் என்பது நாம் தேவனுடன் பேசுவதற்கு மட்டும் வழிவகுக்கிறதா, அல்லது நாம் அவருடைய குரலை கேட்பதற்கும் அது வழிவகுக்கிறதா?









- இக்கட்டான நேரங்களில் ஜெபங்கள்:
  - எலியா: நெருக்கடியின் நடுவே ஜெபம்
  - அன்னாள்: ஒருபோதும் வராத ஒரு பதில்
- மாதிரி ஜெபங்கள்:
  - இயேசு: ஜெபத்தின் உள்ளடக்கம்
  - தானியேல்: ஜெபத்தின் அமைப்பு
- ஜெபத்தை குறித்து நான்கு கேள்விகள்



# இக்கட்டான நேரங்களில் ஜெபங்கள்

# எலியா: நெருக்கடியின் நடுவே ஜெபம்


"அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்." (1 இராஜாக்கள் 19:10)



நெருக்கடியான வேளைகளில் தேவன் நமது ஜெபங்களுக்கு எவ்வாறு பதிலளிக்கிறார்?

எலியாவின் எளிய ஜெபத்திற்கு பிறகு, தேவன் உடனடியாக அக்கினியினால் பதிலளித்தார் (1 இராஜா 18:36-38).

மழை வேண்டி ஏழு முறை ஜெபித்த பிறகு, தேவன் ஒரு சிறிய மேகத்தை அனுப்பினார், அது ஒரு வலிமையான புயலாக மாறியது(1 இராஜா 18:42-45).





எலியா மரணத்தை கேட்டபோது, தேவன் அமைதியாக இருந்தார், ஆனால் அவருக்கு உணவளிக்க தம் தூதரை அனுப்பினார் (1 இராஜா 19:4-8).



ஒரு குகையில் மனம் சோர்ந்து அமர்ந்திருந்த எலியா, இறுதியாக தனது அவசர ஜெபத்திற்கு பதிலளிக்கும் தேவனுடைய குரலை கேட்டார் (1 இராஜா 19:9-18).

ஒரு பதில் உடனடியானதாகவும், அற்புதமாகவும் அமைந்தது. மற்றொரு பதில், ஏழு முறை ஜெபித்த பிறகு எதிர்ப்பார்த்த மழையை வரவழைத்தது. இறுதியாக, 40 நாட்களுக்கு பிறகு, ஒரு வாய்மொழி அல்லது ஊக்கமளிக்கும் பதில் கிடைத்தது. நம் ஒவ்வொருவரின் சூழ்நிலையிலும், எப்போது, எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பது தேவனுக்கே தெரியும்.



# அன்னாள்: ஒருபோதும் வராத ஒரு பதில்

**"இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம்பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார்." (1 சாமுவேல் 1:27)**

ஒரு குழந்தைக்காக அன்னாள் செய்த ஜெபத்திற்கு, தேவனால் விரைவாக பதிலளிக்கப்பட்டது போல் தெரிகிறது(நிச்சயமாக, 9 மாத மகிழ்ச்சியான காத்திருப்புக்கு பின்) (1 சாமு. 1:9-20).





என்றாலும், முந்தைய வசனங்களை நாம் வாசிக்கும் போது, இந்த விடை வந்து சேர மிக நீண்ட காலம் பிடித்தது என்பதை நாம் கவனிக்கிறோம் (1 சாமு. 1:1-8).

எல்க்கானாவின் மற்றொரு மனைவியான பெனின்னாளுக்கு, ஒன்றுக்கும் மேற்பட்ட "பிள்ளைகள்" இருந்தனர். ஆனால் தேவன் அன்னாளுக்கு பிள்ளைகளை அருளாதிருந்தபடியால், அவள் "ஆண்டுதோறும்" அன்னாளை சீண்டி வந்தாள்.

இந்த கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அன்னாள் ஒரு குழந்தையை கேட்டு, அதற்கு பதில் ஏதும் கிடைக்காமலேயே எத்தனை ஆண்டுகளை செலவிட்டாள்?





சில சமயங்களில், தேவனுடைய மௌனமானது, நமது சுயநலத்தினால்(யாக் 4:3); நாம் பற்றிக்கொண்டிருக்கும் ஒரு பாவத்தினால் (சங் 66:18); விசுவாச குறைவினால்(யாக் 1:6); அல்லது, வெறுமனே அதுவே சரியான நேரம் அல்ல என்பதனால் ஏற்பட்டிருக்கலாம்.

எது எப்படியானாலும், தேவன் முழு சூழலையும் காண்கிறார், நமக்கு எது சிறந்தது என்பதையும் அவர் அறிவார் (எரே 29:11). நம்பிக்கையோடு ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு, அவர் எப்போதும் - தமக்குரிய காலத்திலும், தமக்குரிய வகையிலும் - பதிலளிப்பார் (1 யோவான் 5:14-15).

# மாதிரி ஜெபங்கள்



# இயேசு: ஜெபத்தின் உள்ளடக்கம்

"நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக." (மத்தேயு 6:9)



கேட்போரை ஈர்ப்பதற்காகவும், அவர்களால் புகழப்படுவதற்காகவும் நீண்ட மற்றும் விரிவான ஜெபங்களை செய்வது, இயேசு நமக்கு கற்றுக்கொடுத்த ஜெப முறை அல்ல (மத். 6:5-8).



நமது ஜெபங்கள் உண்மையானதாகவும், எளிமையானதாகவும், அன்றாட பேச்சு மொழியில் அமைந்திருக்க வேண்டும். ஜெபம் நம் வாழ்வின் மிக முக்கியமான ஒரு பகுதியாகும்.



"குறுகியதாகவும் நேரடியாகவும், உங்களுக்கு தேவையானதை மட்டுமே கேட்கும் வகையில் ஜெபிக்க கற்றுக்கொள்ளுங்கள். தேவன் மட்டுமே கேட்கக்கூடிய வகையில், சத்தமாக ஜெபிக்க பயிலுங்கள். வெறும் பாசாங்கு ஜெபங்களை செலுத்தாதீர்கள், மாறாக, "ஜீவ அப்பத்தின்" மீது உங்கள் ஆன்மா கொண்டுள்ள தாகத்தை வெளிப்படுத்தும் வகையில், உளமார்ந்தும் உணர்வுபூர்வமானதுமான விண்ணப்பங்களை சமர்ப்பியுங்கள்." (எலன்.ஜி.உவைட். "அவர் ஹை காலிங்", மே 4)



# இயேசு: ஜெபத்தின் உள்ளடக்கம்



**இதுவே இயேசு நமக்கு கொடுத்த ஜெப மாதிரி:**

| | |
|---|---|
| "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே," | மனிதர்கள் அனைவரின் பிதாவுடனான நமது தனிப்பட்ட உறவை நாம் அங்கிகரிக்க வேண்டும் |
| "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" | தேவனுடைய பரிசுத்தத்தை உணர்ந்துகொள்வது நம்மை பக்தியுடனும் அவரிடம் நெருக்கமாக்குகிறது |
| "உம்முடைய ராஜ்யம் வருவதாக;" | இயேசுவின் வருகைக்காக நாம் ஏங்குவோம் |
| "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" | நாம் தேவனுடைய இறையாணமையை ஏற்றுக்கொண்டு, நம் வாழ்விலும் உலகிலும் தேவனுடைய திருவுளம் நிறைவேற வேண்டுமென்று வேண்டுவோம் |
| "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்." | நாம் வாழ்வதற்கு தேவையானவற்றை – உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் - கேட்போம் |
| "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." | தேவன் நம்மை மன்னிப்பது போலவே, நாமும் மனம் வருந்தி, மன்னிப்பை கோரி, நம்மை புண்படுத்தியவர்களை மன்னிக்க வேண்டும் |
| "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்," | இவ்வுலகில் நிகழும் தீமைக்கு எதிராக பாதுகாப்பையும் புகலிடத்தையும் நாம் தேவனிடம் வேண்டுவோம் |
| "ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்," | நாம் எதுவாய் இருக்கிறோமோ, எதை சொந்தமாக கொண்டிருக்கிறோமோ, எதை செய்கிறோமோ - இவை அனைத்தும் தேவனுக்கே உரியவை என்பதை நாம் ஏற்றுக்கொள்வோம். மகிமையும் புகழும் அவருக்கு மட்டுமே உரியவை |

# தானியேல்: ஜெபத்தின் அமைப்பு

"நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி," (தானியேல் 9:3)

தானியேல் 9:4-19ல் பதிவு செய்யப்பட்ட ஜெபம், ஜெபத்தின் 4 அடிப்படை பகுதிகளை நமக்கு விளக்குகிறது:



துதி (தானி. 9:4)

பாவ அறிக்கையும் பாவ மன்னிப்பும்(தானி. 9:5-15)

மனுக்கள் (தானி. 9:16-19)


நன்றி செலுத்துதல் (பிலிப். 4:6)



தானியேல் தன் ஜெபத்தை(நன்றி செலுத்துதல்) முடிப்பதற்கு முன்பே காபிரியேல் தூதன் குறுக்கிட்டார்.

இந்த முறை, நமது தனிப்பட்ட மற்றும் பொதுவான ஜெபங்கள் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும். இயல்பாகவே, "பாவ அறிக்கை மற்றும் பாவ மன்னிப்பு" குறித்த பகுதியானது, ஜெபத்தின் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைக்கபட வேண்டும்.

இந்த அமைப்பு, நமது ஜெபத்தை தேவன் மீது ஒருமுகப்படுத்த நமக்கு உதவுகிறது. இதன் மூலம் தேவனுடைய கருவுலத்திலிருந்து பொருட்களை பட்டியலிட்டு கேட்கும் ஒரு வகையான "பொருட்கொள் பட்டியலாக" அது மாறிவிடுவதை தடுக்கிறது.





# ஜெபத்தை குறித்து நான்கு கேள்விகள்

## தேவனுக்கு அனைத்தும் தெரிந்திருக்கும் போது, நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?

ஜெபம் நம்மை தேவனுடைய அரியணைக்கு உயர்த்துகிறது. மேலும், ஒவ்வொரு நாளும் நம்மை நாமே ஆய்ந்தறியவும், அவரோடு நாம் கொண்டுள்ள உறவை மறுசிந்தனை செய்யவும் நம்மை தூண்டுகிறது.
நாம் என்ன சொல்வது என்று தெரியாவிட்டாலும், பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகிறார்(ரோ. 8:26).



## எல்லாம் நன்றாக இருக்கும் போது நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?



பாவம் செய்யாத தேவதூதர்கள் தேவனை தொடர்ந்து வழிபடுகிறார்கள். நாம் இன்னும் எவ்வளவு செய்ய வேண்டும்?

நமக்கு அனைத்தும் சிறப்பாக அமைவதால், தேவன் நமக்கு தேவையில்லை என்று நினைப்பது ஆணவமாகும்.

## நான் யாருடன் ஜெபிக்க வேண்டும்?

அந்த தருணத்தை பொறுத்து:

1. தனிமையில். அப்போது தான் நமது ஜெபம் மிகவும் நெருக்கமானதாகிறது.
2. குடும்பத்துடன் அல்லது சிறு குழுக்களாக.
3. சபையில்.







## நாம் எப்படி கேட்க வேண்டும்?



இதை செய்வதற்கான மிகத் தெளிவான மற்றும் பாதுகாப்பான வழி, நமது மனதை வெறுமையாக்குவதையோ அல்லது நமக்கு நாமே செவி சாய்ப்பதையோ தவிர்த்து, நமது தனிப்பட்ட பக்தியின் ஒரு பகுதியாக ஜெபத்துடன் வேதாகமப் படிப்பை இணைப்பதே ஆகும்.

எலன் ஜி உவைட் (அவர் ∴பாதர் கேர்ஸ், மே 25)

“நமது தேவையைப் பற்றிய ஆழமான உணர்வும், நாம் கேட்கும் காரியங்களுக்கான பெரும் விருப்பமும் நமது ஜெபங்களில் இருக்க வேண்டும், இல்லையெனில் அவை கேட்கப்படாது. ஆனால், பதில் உடனடியாகக் கிடைக்கவில்லை என்பதற்காக நாம் சோர்வடைந்து நமது விண்ணப்பங்களை நிறுத்திவிடக் கூடாது. “..பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.” (மத்தேயு 11:12). இங்கு குறிப்பிடப்படும் பலவந்தம் என்பது, யாக்கோபு வெளிப்படுத்தியதைப் போன்ற ஒரு பரிசுத்தமான ஊக்கமாகும். நாம் நம்மை ஒரு தீவிரமான உணர்ச்சிக்கு ஆளாக்க முயற்சிக்கத் தேவையில்லை, ஆனால் அமைதியாகவும், விடாமுயற்சியுடனும், கிருபையின் சிம்மாசனத்தில் நமது விண்ணப்பங்களை வலியுறுத்த வேண்டும். நமது பாவங்களை அறிக்கையிட்டு, தேவனுக்கு முன்பாக நமது ஆத்துமாக்களைத் தாழ்த்தி, விசுவாசத்தோடு தேவனை நெருங்குவதே நமது வேலையாகும்.”